## அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்விநிறுவனம்
## நிகர்நிலைப் பல்கலைக்கழகம்(கோயம்புத்தூர் - 641043

மூன்றாம் பருவம்

வகுப்பு : முதுகலை இரண்டாமாண்டு — நேரம் : 3 மணி

துறை : தமிழ் — மதிப்பெண்: 60

### 17MTMC12 தொல்காப்பியம் - பொருளதிகாரம் - I

பகுதி -அ

**I.பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக. (10*1\2=5)**

1. திணை என்பதன் பொருள்

அ) அளவு ஆ) ஒழுக்கம் இ) வையம் ஈ) மரபு

2. முல்லை நில மக்களின் பெயர்

அ)ஆயர் வேட்டுவர் ஆ)குறவன் குறத்தி இ) உழவர் உழத்தியர் ஈ)எயினர் எயிற்றியர்

3. வெட்சி என்பது

அ)ஆநிரைகளைக்கவர்தல் ஆ)ஆநிரை மேய்த்தல் இ)ஆநிரை விரட்டல் ஈ)ஆநிரை பகர்தல்

4. எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்

மெய்ப்பொருள் காண்பது தறிவு"- எத்துறைக்குச் சான்று பகர்கிறது?

அ) காமம் நீத்த பக்கம் ஆ) பொருளொடு புணர்ந்த பக்கம் இ)தாங்கும் காவல் ஈ)அருளொடு

5."மறைந்த ஒழுக்கத் தோரையும் நாளும்

துறந்த ஒழுக்கம் கிழவற் கில்லை" -இதில் கூறுவது

அ)தலைவியின்இயல்பு ஆ)தோழியின்இயல்பு இ)தலைவனின்இயல்பு ஈ)செவிலியின்இயல்பு

6. கைக்கிளை என்பது

அ)ஒரு தலைக்காமம் ஆ)கற்பு வாழ்க்கை இ)களவு வாழ்க்கை ஈ) உடன்போக்கு

7. கற்பில் தொல்காப்பியர் கூறும் தலைமகள் கூற்று?

அ)12 ஆ) 24 இ)99 ஈ)19

8. நாணை விட மகளிர்க்குச் சிறந்தது

அ)அச்சம் ஆ)வெட்கம் இ)கற்பு ஈ)களவு

9. உண்மை செப்பும் கிளவி

அ)அறத்தொடு நிற்றல் — ஆ)அச்சத்தோடு நிற்றல்

இ)வீரத்தோடு நிற்றல் — ஈ)வெட்கத்தோடு நிற்றல்

10. உவமையைச் சொல்ல உவமிக்கப்படும் பொருள் தோன்றுவது

அ)உவமம் ஆ)நகை இ)சுட்டு ஈ)சிறப்பு பொருள்

பகுதி -ஆ

**II.பின்வரும் வினாக்களுக்கு 200 சொற்களுக்கு மிகாமல் விடை தருக (5*4=20)**

11 .அ) தொல்காப்பியர் கூறும். பிரிவுகள் குறித்து எழுதுக.

(அல்லது)

ஆ) கைக்கிளை பெருந்திணை குறித்துத் தொல்காப்பியர் கருத்துக்களை விளக்குக.

12. அ) தும்பைத்திணையின் இலக்கணம் தந்து அதன் துறைகளுள் நான்கினை மட்டும் விளக்குக.

(அல்லது)

ஆ) வாழ்த்து வகைபற்றிப் பாடாண் திணையில் கூறப்படுவனவற்றை உணர்த்துக.

(அல்லது)

13. அ) கற்பில் தலைமகனின் பண்பு நலன்களை ஆய்க.

(அல்லது)

ஆ) காமக்கிழத்தியர்க்குரிய கூற்று நிகழ்வுகளை எடுத்துரைக்க

14. அ) களவில் செவிலியின் பங்கினை மதிப்பிடுக.

(அல்லது)

ஆ) கரணம் குறித்த கற்பியல் கருத்துகளை விவரிக்க..

15 .அ) அறத்தொடு நிற்றல் குறித்து விளக்கம் தருக.

(அல்லது)

ஆ) உள்ளுறையின் வகைகளை விளக்குக.

பகுதி -இ

**III.பின்வரும் வினாக்களுக்கு 600 சொற்களுக்கு மிகாமல் விடை தருக. (5*7=35)**

16. அ) தொல்காப்பியர் கூறும் முதல் கரு உரிப்பொருள்கள் குறித்து எழுதுக

(அல்லது)

ஆ) மடலேறுதல் உடன்போக்குக் குறித்துத் தொல்காப்பியனார் கூறும் கருத்தினை ஆராய்க

17. அ) தொல்காப்பியர் கூறும் வெட்சித்திணையும் துறைகளும் குறித்து ஆராய்க.

(அல்லது)

ஆ) தொல்காப்பியப் புறத்திணையியலின் துணைகொண்டு பண்டைத்தமிழர் போர்நெறிகளை ஆராய்க.

18. அ) களவுக் காலத்தில் தலைவனுக்குரிய கூற்றுக்களைத் தொகுத்து எழுதுக

(அல்லது)

ஆ) களவியலில் தோழி கூற்றுக்களை எடுத்துரைக்க

19. அ) கற்பில் தலைவியின் பண்பு நலன்களை ஆய்க.

(அல்லது)

ஆ) கற்பியலில் தோழியின் கூற்றுக்களைக் கொண்டு அவள் பண்பு நலன்களை ஆராய்க.

20. அ) அறத்தொடு நிலை பற்றிய கருத்துக்களைச் சான்றுடன் ஆராய்க.

(அல்லது)

ஆ)''காட்டலாகா பொருள் என்ப'' – விளக்குக